வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—செங்கேனி

தேதி 02.06.2025 நேரம் மாலை 6.10 மணி

----------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், பராகுவே அதிபர் திரு **சாண்டியாகோ பென்யா பலாசியோ-வை** சந்தித்து, பிரதிநிதிகள் நிலையில் பேச்சுவார்த்தை நடத்தினார்.

மின்சாரத்தில் இயங்கும் பயணியர் வாகனங்களின் உற்பத்தியை ஊக்குவிக்க மத்திய அரசு புதிய வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது.

புதுச்சேரியில், மேல் நிலை எழுத்தர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டவர்களில் 13 பேருக்கு, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று நியமன ஆணைகளை வழங்கினார்.

புதுச்சேரியில் கோடை விடுமுறை முடிந்து, இன்று அனைத்து பள்ளிகளும் திறக்கப்பட்டதால் மாணவர்கள் உற்சாகத்துடன் பள்ளிக்கு வந்தனர்.

மோடி பேச்சுவார்த்தை (16)

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், தற்போது அரசு முறை பயணமாக இந்தியா வந்துள்ள பராகுவே அதிபர் திரு

சாண்டியாகோ பென்யா பலாசியோ-சை சந்தித்து, பிரதிநிதிகள் நிலையில் பேச்சுவார்த்தை நடத்தினார். இருதரப்பு உறவுகளின் எல்லா அம்சங்களையும், இரு தலைவர்களும் மறு ஆய்வு செய்தனர். வேளாண்மை, பாதுகாப்பு, விண்வெளி, டிஜிட்டல் தொழில்நுட்பம் உட்பட பல்வேறு துறைகளில் இருநாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பு வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி இப்பேச்சுவார்த்தையின் போது கூறினார். தீவிரவாதத்தை எதிர்ப்பதில் இருநாடுகளும் ஒன்றாக நிற்பதாக அவர் தெரிவித்தார்.

3 நாள் பயணமாக இந்தியா வந்துள்ள பராகுவே அதிபரை வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரும் புதுடெல்லியில் சந்தித்து பேசினார். பராகுவே அதிபர் இன்று தலைநகரில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணை தலைவர் திரு ஜக்திப் தன்கர் ஆகியோரையும் சந்திக்கிறார். வரும் புதன் கிழமை பராகுவே திரும்பும் முன்பாக, அவர் மும்பையில் பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் தொழிலதிபர்களை சந்திக்கிறார்.

மோடி விமானம் (9)

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை புதுடெல்லி பாரத் மண்டபத்தில், சர்வதேச விமான போக்குவரத்து சங்கத்தின் 81 ஆவது வருடாந்திர பொதுக் குழு கூட்டத்தில் உரையாற்றினார். இந்தியாவில் விமான போக்குவரத்து வசதிகளுக்கு சந்தை தேவை அதிகரித்து

வருவதாகவும், வளர்ச்சி குறித்த இந்தியர்களின் அபிலாஷைகளுக்கு இதுவே சான்றாகும் என்றும அவர் கூறினார்.

நேற்று தொடங்கிய இந்த 3 நாள் கூட்டத்தில், உலக அளவிலான சிவில் விமான போக்குவரத்து துறையினரின் முக்கிய பிரச்சனைகள் குறித்து விவாதிக்கப் படுகிறது. விமானப் போக்குவரத்து துறையில் இந்தியா எட்டியுள்ள முக்கிய மாற்றங்களையும், நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியில் இத்துறையின் பங்களிப்புகளையும், உலகத் தலைவர்கள் நேரில் அறிந்து கொள்வதற்கான வாய்ப்பாக இக்கூட்டம் அமைந்துள்ளதும் குறிப்பிடத் தக்கது.

*பரம்வீர் சக்ரா* -1 (8)

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் வெற்றியை நாம் கொண்டாடி வரும் வேளையில், இந்தியப் படையினரின் வீரத்தை நாடே போற்றுகிறது. இந்தியப் படையினருக்கு புகழாரம் சூட்டும் வகையில் ஆகாஷ்வாணி செய்திப் பிரிவு, சிறப்பு தொடர் ஒன்றை ஒலிபரப்பி வருகிறது. அந்த வரிசையில், 1947 – 48 ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் போரின் போது, நம்ப முடியாத அளவில் வீரத்தை வெளிப்படுத்தி, பரம்வீர் சக்ரா விருது பெற்ற, Lance Naik கரம் சிங் குறித்து ஒரு செய்தி தொகுப்பு....

(வாய்ஸ்)

**(வாய்ஸ்)**

பஞ்சாபில், 1915 ஆம் ஆண்டு பிறந்த Lance Naik கரம் சிங், 1941 ஆம் ஆண்டில், முதலாவது சீக்கிய படைப் பிரிவில் சேர்த்துக் கொள்ளப் பட்டவராவார். 1948 ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் போரில், பல நாள் நீடித்த தித்வால் சண்டையின் போது Lance Naik கரம் சிங், இந்திய எல்லைகளை பாதுகாப்பதில், முக்கிய பங்காற்றினார். அக்டோபர் 13 ஆம் தேதி இரவு, கரம்சிங் தலைமையிலான புறக்காவல் நிலையம், கடும் குண்டு வீச்சுகளுடன், எதிரி படைகள் நடத்திய வலுவான தாக்குதலுக்கு ஆளாயிற்று. இந்திய தரப்பில் ஆள் பலமும், ஆயுத பலமும் குறைவாகவே இருந்த நிலையிலும், Lance Naik கரம் சிங், எதிரி படைகளின் குண்டு மழைக்கு இடையிலேயே ஒவ்வொரு பதுங்கு குழியாக சென்று, கையெறி குண்டுளால் எதிரிகளை திருப்பி அடிக்குமாறு சக வீரர்களை தொடர்ந்து ஊக்கப் படுத்தியதால், இந்திய படைக்குழுவினர் எதிரி படைகளின் 8 தாக்குதல்களை திறம்பட்ட முறையில் எதிர் கொண்டனர். இம்முயற்சிளின் போது, கரம்சிங்கிற்கு இரண்டு முறை காயம் ஏற்பட்ட போதிலும், அவர் போர்க் களத்தில் இருந்து அகற்றப்பட மறுத்து, முன்னணி பதுங்கு குழிகளில் இருந்து தொடர்ந்து போராடினார். எதிரிகளின் 5 ஆவது தாக்குதலின் போது, எதிரி படையினர் இருவர், கரம்சிங் இருந்த இடத்திற்கு

*பரம்வீர் சக்ரா* 3 (12)

மிக அருகிலேயே வந்து விட்டதால் நிலைமைகளின் தீவிரத்தை உணர்ந்த கரம்சிங், பதுங்கு குழியில் இருந்து தவழ்ந்தே வெளிவந்து, தமது துப்பாக்கி முனை ஈட்டி மூலம் எதிரிகளை தாக்கிக் கொன்றார். அவரது அச்சமற்ற செயல்பாடுகளால் எதிரிபடையினர் ஊக்கம் இழந்து, இந்திய அரண்களை மீறும் முயற்சியில் தோல்வியடைந்தனர். அதன் பிறகும் எதிரிப் படையினர் மேற்கொண்ட மேலும் 3 தாக்குதல்களுக்கும் கரம் சிங் மற்றும் அவரது படைக்குழுவினர் வலுவாக பதிலடி கொடுத்தனர். Lance Naik கரம் சிங், சக வீரர்களின் ஊக்கமாக மட்டுமன்றி, எதிரிப் படையினர் கண்டாலே அலறும் வீரராகவும் திகழ்ந்தார். தித்வால் போர்க் களத்தின் வீரத்திற்கும்,நெகிழ்வுத் தன்மைக்கும், அடையாளமாகவே திகழ்ந்த Lance Naik கரம் சிங்கின் அசாதாரண துணிச்சல் மற்றும் தலைமைத் துவத்திற்காக, அவருக்கு, பரம்வீர் சக்ரா விருது வழங்கப் பட்டது.

*மின்சார வாகனம்* (12)

மின்சாரத்தில் இயங்கும் பயணியர் வாகனங்களின் உற்பத்தியை ஊக்குவிக்க மத்திய அரசு புதிய வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது. கனரக தொழில்துறை அமைச்சர் திரு எச் டி குமாரசாமி, புதுடெல்லியில் இன்று இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசுகையில், சர்வதேச கார் பிராண்டுகளை ஈர்க்கும் வகையில், இந்தியாவில், குறைந்தபட்சம் 35 ஆயிரம் டாலர் மதிப்பள்ள மின்சார

கார்களின் இறக்குமதிக்கு, 15 சதவிகித அளவில், குறைந்த வரி விதிக்கப் படுவதாகத் தெரிவித்தார். இத்திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் நிறுவனங்கள், இந்தியாவின் மின்சார வாகனங்களை உற்பத்தி செய்ய, குறைந்தபட்சம் 4 ஆயிரத்து 150 கோடி ரூபாய் முதலீடு செய்ய வேண்டி இருக்கும் என்று அவர் கூறினார். தற்போதைய நிலையில், Hundai, Scoda, Kia, Mercedes-Benz ஆகிய நிறுவனங்கள் இத்திட்டத்தில் ஆர்வம் வெளியிட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

*நியமனம்* (9)

புதுச்சேரி அரசின் பணியாளர் மற்றும் நிர்வாகத் துறையில், போட்டித் தேர்வு மூலம் மேல் நிலை எழுத்தர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டவர்களில் 13 பேருக்கு, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று நியமன ஆணைகளை வழங்கினார். சட்டப்பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது, சட்டப்பேரவை தலைவர் திரு ஆர் செல்வம், மற்றும் துறை அதிகாரிகள் உடனிருந்தனர். மேல்நிலை எழுத்தர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப் பட்ட 234 பேருக்கு ஏற்கனவே பணியாணை வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

*புதுச்சேரி பள்ளி* (10)

புதுச்சேரியில் கோடை விடுமுறை முடிந்து, இன்று அனைத்து பள்ளிகளும் திறக்கப்பட்டதால் மாணவர்கள் உற்சாகத்துடன் பள்ளிக்கு வந்தனர். தொடக்கப் பள்ளியில் படிக்கும் குழந்தைகளை பெற்றோர்கள் அழைத்து வந்து பள்ளியில் விட்டனர். பள்ளிக்கு வந்த மாணவர்களை ஆசிரியர்கள், மற்றும் சக மாணவர்கள் உற்சாகமாக வரவேற்றனர். நகரப் பகுதியில் உள்ள அரசு பள்ளி ஒன்றில், படிப்பிலும், வருகைப் பதிவிலும் சிறந்த விளங்கிய இரண்டு மாணவர்கள், ஒருநாள் தலைமை ஆசிரியர்களாக அறிவிக்கப்பட்டு, கவுரவிக்கப்பட்டனர். காரைக்காலிலும் இன்று கோடை விடுமுறை முடிந்து பள்ளிக்கு வந்த மாணவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

*காரைக்கால் என்ஐடி* (10)

காரைக்கால், என்ஐடி உயர் கல்வி நிறுவனத்தில், **படைப்பாக்கத் திறனுடன் கூடிய செயற்கை நுண்ணறிவு** குறித்து 5 நாள் தேசிய பயிலரங்கு இன்று தொடங்கி உள்ளது. **பிட்ஸ்-பிலானி** உயர் கல்வி நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் சுதிர்குமார் பராய், **ஐஐடி- டெல்லி பேராசிரியர்** அரவிந்த் குமார் நேனா ஆகியோர், பல்வேறு துறைகளில் செயற்கை நுண்ணறிவின் முக்கிய தாக்கங்கள் குறித்து, இன்றைய அமர்வில் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். காரைக்கால்- என்ஐடி

உயர்கல்வி நிறுவனத்தில், செயற்கை நுண்ணறிவு குறித்த பிடெக் படிப்பும், செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திர கற்றல் குறித்த எம்டெக் படிப்பும், விரைவில் தொடங்கப் படும் என **பதிவாளர் டாக்டர் சுந்தரவர்த்தனம்** அறிவித்தார்.

*அனைத்துக் கட்சி1* (5)

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை பற்றிய தூதரக புறவீச்சு முயற்சிகளின் கீழ், மத்திய அரசால் அமைக்கப்பட்ட 7 அனைத்து கட்சி பிரதிநிதி குழுக்கள், பல்வேறு வெளிநாடுகளில், தீவிரவாதத்தை கொஞ்சம் கூட சகித்துக் கொள்ள முடியாது என்னும் இந்தியாவின் நிலைப்பாட்டை, தொடர்ந்து எடுத்துக் கூறி வருகின்றனர். இதுகுறித்து ஒரு செய்தித் தொகுப்பு.....

**(வாய்ஸ்)**

*அனைத்துக் கட்சி2* (15)

**(வாய்ஸ்)**

தேசியவாத காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சுப்ரியா சுலே தலைமையிலான அனைத்து கட்சி குழுவினர், தங்களின் எத்தியோப்பியா பயணத்தை முடித்துக் கொண்டு, இன்று எகிப்து சென்றுள்ளனர். ஜேடியு நாடாளுமன்ற உறுப்பினர் திரு சஞ்சய் குமார் ஜா தலைமையிலான

அனைத்து கட்சி குழுவினர், மலேஷியாவில், மக்கள் நீதி கட்சி தலைவர்களை சந்தித்து பேசினர். சிவசேனா எம்பி திரு ஸ்ரீகாந்த் ஷிண்டே தலைமையிலான குழுவினர், லைபிரியாவில், இந்திய சமூகத்தினரை சந்தித்து கலந்துரையாடினர். பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான குழுவினர், இங்கிலாந்திலும், மற்றொரு பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு பைஜெயந்த் பாண்டா தலைமையிலான குழுவினர் அல்ஜீரியாவிலும், இதே போன்ற செயல்பாடுகளில் ஈடுபட்டனர். காங்கிரஸ் எம்பி திரு சசி தரூர் தலைமையிலான அனைத்து கட்சி பிரதிநிதி குழுவினர் இன்று தங்களின் பிரேசில் பயணத்தை முடித்துக்கொண்டு நாளை அமெரிக்காவிற்கு புறப்பட உள்ளனர்.

*தமிழ்நாடு பாலியல் வழக்கு (8)*

அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப் பட்ட ஞானசேகரனுக்கு சென்னை மகளிர் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளது. குற்றவாளி ஞானசேகரன் தண்டனை குறைப்பின்றி 30 ஆண்டுகளுக்கு சிறையில் இருக்க வேண்டும் என மகளிர் நீதிமன்ற நீதிபதி திருமதி எம் ராஜலட்சுமி இன்று தமது உத்தரவில் கூறினார். ஞானசேகரனுக்கு எதிராக அரசு தரப்பினால் நிருபிக்கப்பட்ட எல்லா 11 குற்றச்சாட்டுகளுக்கும் நீதிமன்றம்

தனித்தனியே தண்டனை விதித்துள்ளது. குற்றவாளி ஞானசேகரனுக்கு 90 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப் பட்டுள்ளது.

*வானிலை* (8)

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக வரும் 8 ஆம் தேதி வரை தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 4 ஆம் தேதி வரை ஒரு சில இடங்களில் வெப்ப நிலை இயல்பை விட, 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை, அதிகமாக பதிவாகலாம் என்றும், வெப்ப நிலை மற்றும் ஈரப்பதம் அதிகமாக இருக்கும் நிலையில், ஓரிரு பகுதிகளில் அசௌகரியம் ஏற்படலாம் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*ஐபிஎல்* (5)

ஐபிஎல் கிரிக்கெட்டில் நாளை இரவு 7.30 மணிக்கு அகமதாபாத்தில் நடைபெறும் இறுதிப் போட்டியில், பெங்களுரு – பஞ்சாப் அணிகள் மோத உள்ளன. நேற்றிரவு அகமதாபாத்தில் நடைபெற்ற 2 ஆவது குவாலிபையர் போட்டியில் பஞ்சாப் அணி, 5 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணியை தோற்கடித்து, இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

கொரோனா (11)

நாட்டில் இதுவரை 3 ஆயிரத்து தொள்ளாயிரத்து 60 க்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. அதிகபட்சமாக கேரளத்தில் ஆயிரத்து 435 பேருக்கும், மகராஷ்டிர மாநிலத்தில் 506 பேருக்கும், தொற்று இருப்பதாக கண்டறியப் பட்டுள்ளது. தலைநகர் டெல்லியில் 483 பேர் கொரோனா தொற்றினால் பாதிக்கப் பட்டுள்ளனர். புதுடெல்லியில், ராம் மனோகர் லோகியா மருத்துவமனையின் கொரோனா பிரிவு பொறுப்பு அதிகாரி டாக்டர் பவன்குமார் நிலவரங்கள் குறித்து ஆகாஷ்வாணியிடம் பேசுகையில், இதுவரை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட எல்லா கொரோனா நோயாளிகளும் குணமடைந்து விட்டதாகவும், நிலவரங்கள் குறித்து பொதுமக்கள் பீதியடைய தேவையில்லை என்றும் கூறினார்.